FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)*

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8165108

1. District : Tirunelveli மாவட்டம் | PS: Vigilance and Anti Corruption காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: 03/2026 மு.த.அ. எண் | Date: 10.06.2026 நாள்

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 | Sections பிரிவுகள்: 7(a) r/w
(ii) Act சட்டம்: BNSS | Sections பிரிவுகள்: 106
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 04.06.2026 10.00 hrs | Time to : நேரம் வரை 15.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | 10.06.2026 | Time : நேரம் 18.00 hrs
10.06.2026 18.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — O/o Joint-I Sub Registrar Office, Palayamkottai, Tirunelveli District. 2 Km North.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — Tr.G.Raja Manoharan | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — Tr.M.Gunaseelan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 07.07.1972 | (d) Nationality : நாட்டினம் — INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி — Inspection Cell Officer, , Tirunelveli Tirunelveli District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr.A.Athisubramanian Age.56/2026, S/o.Tr.A.Athinarayanamoorthy, i/c Sub Registrar, Joint-I Sub Registry, Palayamkottai. 2) Tr.K.Suresh, Age.30/2026, S/o.Tr.S.Kodeiswaran, Door No.85, Second street, Sai Bhaba Colony, Thiyarajanager, Tirunelveli-7. 3) Tr.P.Vinayaga Moorthi, Age.26/2026, S/o.Tr.V.Parameshwaran, Door No.405, Muppidathi Amman Kovil Street, South Ariyakulam, Melakulam Post, Palayamkottai Taluk, Tirunelveli District and 4) Tr.P.Maharajan, Age.39/2026, S/o.Tr.V.Papa, Door No.307, South Street, Udayarkulam, Naduvakurichi, Tirunelveli.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Due to complainant

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பின விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 10.06.2026-ம் தேதி மாலை 18.00 மணிக்கு நான் (D.ராபின் ஞானசிங், காவல் ஆய்வாளர்) நிலைய பொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.G.ராஜ மோகன் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 04.06.2026-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புனர் G.இராஜ மனோகரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி. பெறுனர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. அய்யா, பொருள்: திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் சோதனை செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக. பார்வை 04.06.2026-ம் தேதி 15.30 மணி முதல் 21.00 மணி வரை தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பொறுப்பு சார்பதிவாளர் திரு.ஆ.ஆதிசுப்பிரமணியன் அவர்கள் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக பொதுமக்களிடமிருந்து

/ Separate Sheet attached /

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

10/6/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

10/06/2026 at 19.00 hrs.

Name: பெயர் D. Robin Gnanasingh
Rank: நிலை ..... No. எண் .....

Continuation of Tirunelveli Vigilance and Anti Corruption Crime No.03/2026:-

பத்திர பதிவிற்காக லஞ்சப்பணம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில், திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங் மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் மேற்படி பாளையங்கோட்டை 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் 04.06.2026-ம் தேதி மாலை 15.30 மணி முதல் 21.00 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் திரு.ஆ.ஆதிசுப்பிரமணியன் என்பவரிடமிருந்து பணம் ரூ.320/-ம், தனிநபரான திரு.கே.சுரேஷ் என்பவரை சோதனை செய்த போது, அவரது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.28,500/-ம், தனிநபரான திரு.ப.விநாயக மூர்த்தி என்பவரை சோதனை செய்த போது அவரது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.10,000/-ம் மற்றும் மற்றொரு தனிநபரான திரு.பா.மஹாராஜன் என்பவரை சோதனை செய்த போது, அவரது சட்டை பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.11,800/-ம் ஆக மொத்தம் பணமாக ரூ.50,620/- கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்திற்கு மேற்படியார்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாக இருக்கலாம் அல்லது கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கை 04.06.2026-ம் தேதி மாலை 15.30 மணிக்கு ஆரம்பித்து இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் திரு.ஆ.ஆதிசுப்பிரமணியன் மற்றும் மூன்று தனிநபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகாருடன் செயல்முறை நடவடிக்கையை இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். (G.இராஜ மனோகரன்) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி (10.06.2026) (10.06.2026) Sir, Received the compiaint today on 10.06.2026 at 18.00 hrs and registered a case in Tirunelveli V&AC, Cr.No.03/2026 u/s 7(a) of P.C (Amendment) Act, 2018 r/w 106 BNSS on 10.06.2026 at 18.00 hrs Sd.D.Robin Gnanasingh, Inspector of Police, V&AC, Tirunelveli dt 10.06.2026. செயல்முறை நடவடிக்கை பின்வருமாறு:- 04.06.2026-ம் தேதி திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கட்டிடத்தின் முதல் மாடியில் செயல்பட்டுவரும், பாளையங்கோட்டை 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தை திருநெல்வேலி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.G.இராஜ மனோகரன் அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறைநடவடிக்கைகள். முன்னிலை : 1) திரு.G.இராஜ மனோகரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி 2) திரு.D.ராபின் ஞானசிங், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு இன்று 04.06.2026-ம் தேதி மதியம் சுமார் 14.00 மணியளவில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலக ஊழியர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கு ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.G.இராஜ மனோகரன் அவர்கள், திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங், மற்றும் காவலர்கள் சகிதம் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 15.00 மணியளவில் காவல் வாகனம் TN 21 G 0489-ல் புறப்பட்டு குலவணிகர்புரம் வழியாக வந்து சுமார் 15.30 மணிக்கு பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் திருநெல்வேலி

மாநகராட்சிக்குட்பட்ட அலுவலகத்தின் முதல் மாடியில் செயல்பட்டு வரும் பாளைங்கோட்டை 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தை திருநெல்வேலி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.G.இராஜ மனோகரன் காவல் ஆய்வாளர், பெண் தலைமைக்காவலர் எண்.3385 திருமதி.கே.சரஸ்வதி மற்றும் போலீஸ் பார்டி சகிதம் திடீர் தணிக்கை செய்ய வந்த விபரத்தை, பொறுப்பு சார் பதிவாளர் திரு.ஆ.ஆதிசுப்பிரமணியன் அவர்களிடம் தெரிவித்து, அங்கிருந்த அலுவலர்களை அவரவரது இருக்கைகளில் அமர சொல்லிவிட்டு மேற்படி அலுவலகத்தை சோதனை செய்யப்பட்டது. மேற்படி, அலுவலகத்தின் கிழக்கு புறம் பாளையங்கோட்டை மாவட்ட பதிவாளர் நிர்வாகம் அலுவலகம் அமைந்துள்ளது. வருகைப்பதிவேடு மற்றும் தனிநபர் கையிருப்பு பதிவேடு ஆகியவை மாவட்ட பதிவாளர் அலுவலக பணியாளர்களுடன் இணைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. திடீர் சோதனையின்போது, மேற்படி அலுவலகத்தின் வராண்டாவில் நின்று கொண்டிருந்த ஆவண எழுத்தர்களை ஒவ்வொருவராக சோதனை செய்ய, பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட 1) திரு.கே.சுரேஷ், த/பெ திரு.கோடீஸ்வரன், கதவு எண்.85, 2வது சாய்பாபா காலனி தெரு, தியாகராஜநகர் என்பவரை சோதனை செய்த போது, அவரது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்த போது அதில், ரூ.28,500/- (500 X 57) பணம் இருந்தது. மேற்படி பற்றி அவரிடம் கேட்ட போது சரியான முகாந்திரம் சொல்லாததால், மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. மேலும், வராண்டாவில் இருந்த மற்றொரு நபரான திரு.ப.விநாயக மூர்த்தி த/பெ திரு.பரமேஸ்வரன், கதவு எண்.405, முப்பிடாதி அம்மன் தெரு, தெற்கு அரியகுளம் என்பவரை சோதனை செய்த போது, அவரது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்த போது அதில், ரூ.10,000/- (500 X 19 = 9,500, 100 X 5 = 500) பணம் இருந்தது. மேற்படி பற்றி அவரிடம் கேட்ட போது சரியான முகாந்திரம் சொல்லாததால், மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. மேலும், வராண்டாவில் நின்று கொண்டிருந்த மற்றொரு நபரான திரு.பா.மஹாராஜன், த/பெ திரு.பாப்பா, தெற்கு தெரு, உடையான்குளம், பாளையங்கோட்டை தாலுகா என்பவரை சோதனை செய்த போது, அவரது சட்டை பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்த போது அதில், ரூ.11,800/- (500 X 23 = 11,500, 100 X 3 = 300) பணம் இருந்தது. மேற்படி பற்றி அவரிடம் கேட்ட போது சரியான முகாந்திரம் சொல்லாததால், மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி வராண்டாவில் நின்ற இதர ஆவணதாரர்களிடம் சோதனை செய்யப்பட்டது. பெண் தலைமைக்காவலர் திருமதி.சரஸ்வதி உதவியுடன் பெண் ஆவணதாரர்களை சோதனை செய்ததில், பணம் எதுவும் இல்லை. பின்னர் மேற்படி சார் பதிவாளர் பொறுப்பு திரு.ஆ.ஆதிசுப்பிரமணியன் என்பவரை விசாரணை செய்ய அவர் தான் பாளையங்கோட்டை மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட எட்டையபுரம் சார்பதிவகத்தில் உதவியாளராக பணிபுரிந்து கொண்டு, பாளையங்கோட்டை 1 எண் இணை சார்பதிவக பொறுப்பு சார் பதிவாளராக கடந்த 08.09.2025-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்ய, அவர் அவரது சட்டையின் முன்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணம் ரூ.1.650/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதனை தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் சரிபார்த்து மேற்படியாரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர் ஆஜர் செய்த பணம் ரூ.1,650/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி, தனி நபர் கையிருப்பு பதிவேடானது, மேற்படி அலுவலகத்தின் கிழக்கு புறம் அமைந்துள்ள பாளையங்கோட்டை மாவட்ட பதிவாளர் நிர்வாகம் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டு, சரிபார்க்கப்பட்டது. மேற்படி சார் பதிவாளரின் இருக்கைக்கு வலது பக்கம் கிழக்கு

புறம் அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் திரு.வெ.வரதராஜன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் எந்த பணமும் இல்லை. தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் எந்த பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. சார்பதிவாளரின் முன்பு நின்று கொண்டிருந்த அலுவலக உதவியாளரான தெ.ஆறுமுகம் என்பவரை சோதனை செய்ய அவரிடம் எந்த பணமும் இல்லை. தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் எந்த பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி சார் பதிவாளரின் இருக்கைக்கு இடது பக்கம் மேற்க்கு புறம் அமர்ந்திருந்த டேட்டா என்டிரி ஆப்பரேட்டர் திரு.செ.ஆனந்த் என்பவரை சோதனை செய்ய அவரது பேட்டின் இடது பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்ஸில் பணம் ரூ.80/- காணப்பட்டது. அது குறித்து அவரிடம் கேட்க தனது செலவுக்கு வைத்திருப்பதாக சொன்னார். மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பணம் குறித்து தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் எந்த பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தின் மேற்கு புறம் அமைந்துள்ள, அலுவலக கணினி அறையின் மையப்பகுதியில் அமர்ந்திருந்த கேமரா ஆப்பரெட்டர் திருமதி.ச.பொன்னுதாய் என்பவரை பெண் தலைமைக் காவலர் திருமதி.சரஸ்வதி உதவியுடன் சோதனை செய்ய அவரது பர்ஸில் பணம் ரூ.170/- காணப்பட்டது. அது குறித்து அவரிடம் கேட்க தனது செலவுக்கு வைத்திருப்பதாக சொன்னார். மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பணம் குறித்து தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் எந்த பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி கணினி அறையின் மேற்குபுறம் அமர்ந்திருந்த அமர்ந்திருந்த டேட்டா என்டிரி ஆப்பரேட்டர் திருமதி.மு.உமாமகேஷ்வரி என்பவரை பெண் தலைமைக் காவலர் திருமதி.சரஸ்வதி உதவதியுடன் சோதனை செய்ய அவரது பேக்கில் பணம் ரூ.10/- காணப்பட்டது. அது குறித்து அவரிடம் கேட்க தனது செலவுக்கு வைத்திருப்பதாக சொன்னார். மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பணம் குறித்து தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் எந்த பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், மேற்படி கணினி அறையில் டேட்டா என்டரி ஆப்பரேட்டரின் இடது புறம் தரையில் வைக்கப்பட்டிருந்த கறுப்பு நிற லஞ்ச் பேக்கை சோதனை செய்ய அதில், கறுப்பு நிற Genuine Leather எனக்குறிக்கப்பட்ட பர்ஸ் ஒன்று காணப்பட்டது. அதனை சோதனை செய்து பார்க்க திரு.ஆ.ஆதிசுப்பிரமணியன் என்பவரின் ஆதார் கார்டு, அலுவலக ஐடி கார்டு மற்றும் TN-57-H-7025 இருசக்கர வாகனத்தின் ஆர்சி புக் கார்டு மற்றும் மேற்படியாரின் கயத்தார் கனரா வங்கி மற்றும் கோவில்பட்டி கரூர்வைசியா வங்கி ஆகியவற்றின் ஏடிஎம் கார்டுகள் மற்றும் பணம் ரூ.320/- (100 X 3 = 300, 10 x 2 = 20) காணப்பட்டது. இது குறித்து திரு.ஆ.ஆதிசுப்பிரமணியன் என்பவரிடம் கேட்க தனது பர்ஸ் எனத்தெரிவித்தார். மேற்படி பர்ஸில் காணப்பட்ட ரூ.320/- பணம் தொடர்பாக தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிடப்படாததாலும், சரியான முகாந்திரம் தெரிவிக்காததாலும், மேற்படி பணம் மற்றும் பர்சுடன் கைப்பற்றப்பட்டது. மேற்படி பர்சில் காணப்பட்ட ஆதார் கார்டு, அலுவலக ஐடி கார்டு மற்றும் TN-57-H-7025 இருசக்கர வாகனத்தின் ஆர்சி புக் கார்டு மற்றும் மேற்படியாரின் கயத்தார் கனரா வங்கி மற்றும் கோவில்பட்டி கரூர்வைசியா வங்கி ஆகியவற்றின் ஏடிஎம் கார்டுகள் ஆகியவற்றின் செராக்ஸ் நகல் கைப்பற்றப்பட்டது. சார் பதிவாளர் பொறுப்பு திரு.ஆ.ஆதிசுப்பிரமணியன் அவர்களிடம் இன்று பதிவு செய்த ஆவணங்கள் மற்றும் இன்றைய கணக்குகள் குறித்து கேட்டபோது, அவர் கணினியில் இருந்து எடுத்த கணக்கு A, D, CD account, Sub Division account, Sec 41, TM, ஆகிய தலைப்புகளில் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்கு ஆன்லைன் மூலமாக பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதன்படி, Aதலைப்புகளில் ரூ.11,50,724/-ம், D-தலைப்புகளில் ரூ.11,279/-ம், CD கட்டணம்

ரூ.4,500/-ம், Sub Division-ல் ரூ.16,600/-ம், Section 41-ல் ரூ.34,45,035/-ம் மற்றும் T.M-ல் ரூ.2,670/-ம் ஆன்லைனில் செலுத்தப்பட்டுள்ளதாகவும், பணமாக எந்த கட்டணமும் வசூல் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேற்படி ஆன்லைனில் ஆவணம் பதிவு செய்யப்பட்டதற்கான விபரங்களை (10 தாள்கள்) கணினியில் பிரிண்ட் எடுத்து வைத்திருந்ததை ஆஜர் செய்தார். இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கை இன்று (04.06.2026) இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். G.இராஜ மனோகரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம் மற்றும் சிலர்.

The original complaint, Proceedings of Inspection Cell Officer, Tirunelveli District and original FIR were sent to the court of Hon'ble Principal District and Sessions Judge, Tirunelveli and copies sent to concerned Higher Officials.

10/6/26

J. Robin Gnanaraj

Inspector, VAC

Tirunelveli.